(எட்டாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 1(9).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2019 பெப்ரவரி 22 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2019 மார்ச்சு 05, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர்,— நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (87 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச் சட்டத்தின் 6அ மற்றும் 19அ பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 115அ என்னும் பிரிவின் கீழ் வெளிப்படையான நம்பிக்கைப் பொறுப்புக்களுக்கான தகவல்கள் தொடர்பில் நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 சனவரி 28 ஆம் திகதிய 2108/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.02.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்கள் மூலம் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4(3) ஆம் பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரின் கீழ் வாகனம் வெளியேற்றும் மாசுத் தரங்கள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள்/ தரங்கள் தொடர்பில் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 சனவரி 25 ஆம் திகதிய 2107/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் 2019.02.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## 2019 மார்ச்சு 15, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

113/ ’18

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) ஊவா மாகாணசபையில் இடம்பெற்றுள்ள மற்றும் இடம்பெற்று வருகின்ற முறைகேடுகள் சம்பந்தமாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் SIN/B/AG/ KI/2017/02 இலக்கமும் 2017.04.20 திகதியும் கொண்ட புலனாய்வு அறிக்கை ஒன்று ஊவா மாகாண பிரதம செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வறிக்கையில் ஊவா மாகாணசபையின் பிரதான அமைச்சரின் ஆலோசகர்களை நியமித்தல் சம்பந்தமாக வெளிக்கொணரப்பட்டுள்ள, பந்தி இலக்கம் 2 (அ)(i) தொடக்கம் (x) வரையான விடயங்களை இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா;

(ii) மேற்படி வெளிக்கொணரல்கள் தொடர்பாக 2 (ஆ) (i) தொடக்கம் (xiii) வரை மேற்கொண்டுள்ள அவதானிப்புகளைச் சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2019 மார்ச்சு 18, திங்கட்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழிற் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வலுசக்தி முகாமைத்துவம் பற்றிய சனாதிபதி செயலணி தாபிக்கப்பட்ட சட்ட அடிப்படை யாதென்பதையும்;

(ii) அந்நிறுவனம் தாபிக்கப்பட்டதன் பின்னர் நிறைவேற்றப்பட்ட பிரதான பணி யாதென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனம் சார்பாக மேற்கொள்ளப்பட்ட முதலீட்டுக்கு ஒப்பீட்டளவில் பெறுபேறு கிடைக்கப்பெறவில்லையென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பரா?

(ஆ) இன்றேல், ஏன்?

65/ ' 18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் இலங்கைக்கு பசுமாடுகளை இறக்குமதி செய்கையில் ஒரு பசுமாட்டுக்காக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பணத்தொகை ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

(ii) மேலே (i) இல் குறிப்பிடப்படும் பசுமாடுகளை இறக்குமதி செய்கையில் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள பணத்தொகை ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

(iii) இறக்குமதி செய்யப்பட்ட பசுமாடுகளில் பயன் பெற்றுக்கொள்ள முடியாத மற்றும் மரணித்துள்ள பசுமாடுகளின் எண்ணிக்கை யாது;

(iv) இறக்குமதி செய்யப்பட்டுள்ள பசுமாடுகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக செலவிடப்பட்டுள்ள பணத்தொகை யாது;

(v) தனிப்பட்ட தொழில்முயற்சியாளர்களுக்கு விற்பனை செய்கையில் ஒரு பசு மாட்டுக்காக அறவிடப்பட்டுள்ள பணத்தொகை யாது;

(vi) பசுமாடுகளை வழங்குவதற்கான தனிப்பட்ட தொழில்முயற்சியாளர்களை தெரிவு செய்கையில் கருத்தில் கொள்ளப்பட்டுள்ள அளவுகோல்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

116/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஊவா மாகாண சபையின் கீழ் நிருவகிக்கப்படும் பாடசாலைகள் யாவை என்பதையும்;

(ii) ஊவா மாகாணத்தின் முதலமைச்சர் அந்த பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பின்னர் மேற்படி பாடசாலைகளுக்கு மாகாண சபையின் நிதி ஏற்பாட்டில் வழங்கப்பட்ட கட்டடங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) கட்டடங்கள் வழங்கப்பட்ட பாடசாலைகளின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(iv) குறித்த நிர்மாணிப்புகள் வழங்கப்பட்ட ஆட்களினதும் கம்பனிகளினதும் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(v) மேற்படி நிர்மாணிப்புகளுக்காக மாகாண சபை செலவிட்டுள்ள பணத்தொகை தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

214/ '18

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பேலியகொட மத்திய மீன் விற்பனைச் சந்தைத் தொகுதி திறக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி சந்தைத் தொகுதியின் வாகனத் தரிப்பிடம் திறந்துவைக்கப்பட்ட திகதி முதல் அதன் மூலமாக இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் வருடாந்தம் பெற்ற வருமானம் எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி வாகன தரிப்பிடத்தின் வருமானத்தின் ஒரு பகுதி தனியார் கம்பனியொன்றுக்கு கிடைக்கின்றதா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி பணத்தொகை வருடாந்தம் எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி பணத்தொகையை வசூலித்தலானது மேற்படி தனியார் கம்பனிக்கு கேள்விப்பத்திர முறையியலொன்றின்படி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், அதற்கு கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்த ஏனைய கம்பனிகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

624/ '18

கௌரவ செஹான் சேமசிங்க,— கமத்தொழில், கிராமிய பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேட் கம்பனி தற்போது பெறுகின்ற வருமானம் மற்றும் இலாபம் எவ்வளவு என்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டு முதல் அதன் தவிசாளராக பணிபுரிந்தவர் யார் என்பதையும்;

(iii) அவருக்கு உரித்தான உத்தியோகபூர்வ வாகனங்களின் எண்ணிக்கை, எரிபொருள் கொடுப்பனவு மற்றும் சம்பளமும், கொடுப்பனவுகளும் தனித்தனியே யாது என்பதையும்;

(iv) 2015 ஆம் ஆண்டு முதல் இன்று வரை அவருக்குச் செலுத்தப்பட்டுள்ள மொத்தத் தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக வேறு கொடுப்பனவுகள் செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி கொடுப்பனவுக்கு அங்கீகாரம் வழங்கியிருப்பது யார் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

320/ '18

கௌரவ சிசிர ஜயகொடி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தேசிய பாடசாலை ஒன்றில் 08 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றிய அதிபர்களுக்கு இடமாற்றம் வழங்கும் வேலைத்திட்டமொன்றை கல்வி அமைச்சு 2018 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துகிறதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதன் கீழ் இடமாற்றம் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள தேசிய பாடசாலைகள் மற்றும் அவற்றிலுள்ள அதிபர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) இந்த இடமாற்றம் வழங்கல் காரணமாக தேசிய பாடசாலைக் கட்டமைப்பு முழுமையாக சீர்குலைதல் மற்றும் குறித்த பாடசாலைகளின் கல்வித் தரம் வீழ்ச்சியடையாது என்பதற்கு உத்தரவாதமளிப்பாரா என்பதையும்;

(iv) மேற்படி பாடசாலைகளுக்கு புதிய அதிபர்களை நியமிப்பதற்காக பின்பற்றப்படும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

378/ '18

கௌரவ ஜயந்த சமரவீர,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2017.05.27 ஆம் திகதி ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு காரணமாக புலத்சிங்கள பிரதேச செயலாளர் பிரிவின் பொலேகொடயிலிருந்து இஹல வெல்கம வரை செல்கின்ற வீதியில் 1 ஆம் கட்டை எனும் பிரதேசம் மண்சரிவுக்கு உள்ளாகியமையின் மூலம் தற்போது அவ்வீதியை பயன்படுத்துவதற்கு இயலாத நிலை தோன்றியுள்ளதென்பதையும்;

(ii) இந்நிலைமை காரணமாக மேற்படி வீதியை பயன்படுத்திய இலக்கம் 819G முதுன, 819H கமகேவத்த, 824 தென்னஹேன மற்றும் 825 இஹல வெல்கம ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் அமைந்துள்ள ஓமத்த குடியேற்றம், ஓமத்த கொலணி, கம்பலகந்த, வவுலாகந்த, முதுன, பட்டேகல்ல, தென்ஹேன, சமகிபுர, இஹல வெல்கம, கல்லனமுல்ல, ஹேன்யாய மற்றும் அட்டஹவுல்ஹேன ஆகிய பிரதேசங்களில் 10,000 - 15,000 இற்கு இடைப்பட்ட மக்கள் பாரிய இன்னலுக்கு உள்ளாகியுள்ளார்கள் என்பதையும்;

(iii) இந்த வீதியை சீரமைப்பதற்கு தற்போது எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) பயன்படுத்த முடியாத அளவிற்கு சேதமடைந்துள்ள மேற்படி வீதியை துரிதமாக மறுசீரமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மறுசீரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் காலப்பகுதி மற்றும் நிறைவுசெய்யும் காலப்பகுதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

391/ '18

கௌரவ தேனுக விதானகமகே,— மின்வலு, எரிசக்தி மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மதஸ்தலங்கள் மற்றும் பொது இடங்களில் சூரிய சக்தியினாலான மின் பிறப்பாக்கி பொறித்தொகுதிகளை பொருத்தும் வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றதா;

(ii) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்துக்காகவும் செலவிடப்படும் பணத்தொகை வெவ்வேறாக யாது;

(iii) மேற்படி வேலைத்திட்டத்தை முன்னெடுக்கும் நிறுவனம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இந்த ஒவ்வொரு கருத்திட்டத்துக்கும் பெயர் பதாதையொன்று பொருத்தப்படுமா;

(ii) ஆமெனில், ஒரு பெயர்ப் பதாதைக்கான செலவு யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், யாது?

## 2019 மார்ச்சு 19, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

4/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கூரகல தொல்பொருளியல் இடத்தைப் பேணிப்பாதுகாப்பதற்காக அரசாங்கம் இதுவரையில் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

66/ '18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அனுராதபுர மாவட்டத்துக்கு சொந்தமான இப்பலோகம பிரதேச செயலகப் பிரிவுக்குரிய பூகொல்லாகம, பலும்கல பிரதேசத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க தொல்லியல் காணியொன்று பொறித்தொகுதிகளை கொண்டு அழிக்கப்படுகிறதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) இக்காணியில் புராதன அழிவுச் சின்னங்கள் காணப்படுகின்றனவா என்பதையும்;

(iv) மேற்படி அழிவுச் சின்னங்கள் எந்த காலத்துக்குரியதென ஊகிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) மேற்படி காணியின் உரிமையாளர்கள் யாவர் என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நடவடிக்கைக்கு அனுமதி அளித்த உத்தியோகத்தர் யார் என்பதையும்;

(ii) மேற்படி நடவடிக்கைக்கு தொல்லியல் திணைக்களத்தின் அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) பொறித் தொகுதிகளை பயன்படுத்தி இத் தொல்லியல் காணியை அழிப்பதற்கு பங்களிப்பு செய்தவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

122/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை ஊவா மாகாண கல்வித் திணைக்களத்தினால் பதுளை மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்காக நிர்மாணிப்பட்ட இரண்டு மாடி மற்றும் மூன்று மாடிக் கட்டிடங்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்ட பாடசாலைகளின் பெயர், முகவரிகள் யாவை என்பதையும்;

(iii) இக்கட்டடங்களை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தங்களை பெற்றுக்கொண்ட ஆட்கள்/நிறுவனங்களின் பெயர் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி நிர்மாணப் பணிகளுக்காக ஒவ்வொரு ஆளுக்கும்/நிறுவனத்திற்கும் செலுத்தப்பட்ட பணத்தொகை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி நிர்மாணப் பணிகளுக்கான ஒப்பந்தங்களை பெற்றுக்கொடுக்கும் போது மாகாண கல்வித் திணைக்களம் பின்பற்றிய முறையியல் யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

323/ '18

கௌரவ இஷாக் ரஹுமான்,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கெக்கிராவ நகரத்தில் அமைந்துள்ள பஸ் தரிப்பு நிலையம் 1977 ஆம் ஆண்டு முதல் இதுவரை முறையாக புதுப்பிக்கப்படாமையினால், மிகவும் சீரழிந்த நிலையில் காணப்படுகின்றது என்பதையும்;

(ii) இதன் காரணமாக பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதுடன், பஸ் தரிப்பு நிலையத்தில் பஸ் வண்டிகளை ஓட்டி நிறுத்துவதில் மிகவும் சிரமம் காணப்படுகின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பஸ் தரிப்பு நிலையத்தை எதிர்வரும் காலத்தில் மறுசீரமைப்புச் செய்ய நடவடிக்கை மேற்கொள்வாரா;

(ii) ஆமெனில், அத்திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

386/ '18

கௌரவ ரீ. ரஞ்சித் த சொய்சா,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தெற்கு அதிவேக வீதியின் மொத்த நீளம் எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி வீதியை நிர்மாணிப்பதற்கான மதிப்பீட்டுச் செலவு எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி வீதியை நிர்மாணிக்கின்றபோது காணி மற்றும் ஏனைய சொத்துக்களை இழந்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) இவர்களுக்கு வழங்குவதற்குள்ள இழப்பீட்டுத் தொகை ஏற்கனவே பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனின், செலுத்தப்பட்டுள்ள மொத்த இழப்பீட்டுத் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் தெற்கு அதிவேக வீதியின் மூலமாக அரசாங்கம் ஈட்டிய மொத்த வருமானம் ஆண்டு வாரியாக தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஆண்டுகளில் வீதியின் திருத்த வேலைகளுக்காக ஒதுக்கப்பட்ட மொத்த பணத் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

673/ '19

கௌரவ எச்.ஆர்.சாரதி துஷ்மந்த,— கமத்தொழில், கிராமிய பொருளாதார, கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நீர்ப்பாசன அமைச்சின் கீழ் CRI என்ற கருத்திட்டமொன்று உலக வங்கி நிதியுதவியுடன் செயற்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) இக்கருத்திட்டத்தின் கீழ் தற்சமயம் முன்மொழியப்பட்டுள்ள கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டங்களில் எட்டியாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள வீ ஓயா கருத்திட்டத்தின் முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) CRI கருத்திட்டத்தின் கீழ் தெரனியகல பிரதேச செயலகப் பிரிவில் அல்லது தெஹியோவிட்ட பிரதேச செயலகப் பிரிவில் ரூகாசல் என்ற கருத்திட்டத்தின் முன்னேற்றம் யாதென்பதையும்;

(ii) இக்கருத்திட்டத்தின் திட்டவரைவை இச்சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தினால் தெரனியகல நகர் நீரில் மூழ்குமா என்பதையும்;

(iv) இக்கருத்திட்டத்திற்கு மதிப்பிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(v) இத்தொகை மதிப்பீட்டையும் திட்டவரைவையும் இச்சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

411/ '19

கௌரவ நிஹால் கலப்பத்தி,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக மதுவரித் திணைக்களத்தின் கீழ் அமைக்கப்பட்ட உற்பத்தி வரிப் பிரிவில் பணியாற்றுவதை மதுவரி பரிசோதகர்கள் நிராகரித்துள்ளனர் என்பதையும்;

(ii) ஆகவே, அச்சட்டத்தில் மதுவரி பரிசோதகர் சேவைக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட உப பரிசோதகர்களை மதுவரி பரிசோதகர் சேவைக்கு பதவி உயர்த்தும் பொருட்டு நிதிப் பிரமாணம் 71 இன் கீழ் 10 மதுவரி பரிசோதகர் பதவிகள் வரவு செலவுத் திட்ட பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) அங்கீகரிக்கப்பட்ட மேற்படி பதவிகளை, மதுவரித் திணைக்களத்தின் உற்பத்தி வரி பிரிவில் இணைக்கப்பட்டுள்ள உப பரிசோதகர்களுக்கு பதவி உயர்வு வழங்குவதன் மூலம் பூர்த்திசெய்ய நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர் அங்கீகரித்துள்ளார் என்பதையும்;

(iv) சோதனை ஒன்றின் மூலம் பதவி உயர்வு வழங்கி மேற்படி 10 பதவிகளை நிரப்ப அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) உற்பத்தி வரி உப பரிசோதகர்களுக்கு மது வரி பரிசோதகர் பதவிக்கான பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அந்த நபர்கள் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

416/ '19

கௌரவ காமினி லொக்குகே,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015.01.15 ஆம் திகதியில் மத்திய கலாசார நிதியத்தில் சேவையில் ஈடுபட்டிருந்த நிரந்தர, அமைய மற்றும் ஒப்பந்த ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது என்பதையும்;

(ii) 2015.01.15 தொடக்கம் 2018.05.15 ஆம் திகதி வரை மத்திய கலாசார நிதியத்துக்கு நிரந்தர, அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது என்பதையும்;

(iii) மேற்படி ஆட்சேர்ப்புகள் மத்திய கலாசார நிதியத்தின் ஆளணிக் கட்டுப்பாட்டு திட்டத்துக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஊழியர்களுக்காக மத்திய கலாசார நிதியத்தின் மூலம் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகளாக மாதாந்தம் செலவிடப்படுகின்ற தொகை எவ்வளவென்பதையும்;

(v) 2015.01.15 தொடக்கம் 2018.05.15 ஆம் திகதி வரை மத்திய கலாசார நிதியத்தினால் தொல்லியல் திணைக்களத்துக்கு நிரந்தர, அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(vi) மேற்படி (v) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஊழியர்களுக்காக மத்திய கலாசார நிதியத்தின் மூலம் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகளாக மாதாந்தம் செலவிடப்படுகின்ற தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2019 மார்ச்சு 21, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

21/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தின் கொடக்கவெல, வேரஹெர நீர் விநியோகத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் அது இடைநடுவே நிறுத்தப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) அக் காரணத்தினால் அப் பிரதேச மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(ஆ) (i) திட்டமிட்டவாறு அத் திட்டத்தின் நிர்மாணப் பணிகளை மீள ஆரம்பிப்பதற்கு துரிதமாக நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதன் நிர்மாணப் பணிகள் எப்போது ஆரம்பிக்கப்படுமென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

123/'18

கௌரவ சமிந்த விஜேசிறி,— ஆரம்ப கைத்தொழில்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வீடமைப்பு உதவி வழங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று செயற்படுத்தப்படுகின்றதா;

(ii) ஆமெனில், நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்பு, இவ்வீடமைப்பு உதவி பெற்ற பதுளை மாவட்ட ஆட்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவின் படி வெவ்வேறாக யாவை;

(iii) எதிர்வரும் காலத்தில் இக்கருத்திட்டத்தின் கீழ் அதிக அளவிலான வீடமைப்பு உதவிகளை பதுளை மாவட்ட மக்களுக்கு வழங்க அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

244/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மொணறாகலை மாவட்டத்தின் மடுல்ல பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள அடையாளம் காணப்பட்ட தொல்பொருளியல் இடங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை;

(ii) அப்பிரிவில் அகழ்வுகள் மேற்கொள்ளப்படாத எனினும், அடையாளம் காணப்பட்ட தொல்பொருளியல் இடங்கள் அமைந்துள்ளனவா;

(iii) ஆமெனில், அவை யாவை;

(iv) மேற்படி பிரிவில் அமைந்துள்ள தொல்பொருளியல் முக்கியத்துவம் வாய்ந்த ரஜமகா விகாரைகளின் எண்ணிக்கை எவ்வளவு; அது பற்றிய அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பாரா;

(v) மேற்படி தொல்பொருளியல் இடங்களின் பேணல் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் பற்றிய முழுமையான அறிக்கையொன்றை இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

490/ '19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) அந்த எரிபொருள் நிரப்பு நிலையங்ககளின் முகவரிகள் யாவை;

(iii) அந்த எரிபொருள் நிலையங்களில் கூட்டுத்தாபனத்துக்குரிய எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மற்றும் IOC கம்பனிக்குரிய எரிபொருள் நிரப்பு நிலையங்கள் வெவ்வேறாக யாவை;

(iv) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை கண்டி மாவட்டத்தில் வழங்கப்பட்டுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கான அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை யாது;

(v) அந்த அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொண்ட நபர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை;

(vi) அவ்வாறு அனுமதிப்பத்திரங்களை வழங்கியதன் மூலம் கூட்டுத்தாபனம் ஈட்டிய பணம் எவ்வளவு:

(vii) அவ்வாறு எரிபொருள் நிலைய அனுமதிப்பத்திரங்களை வழங்கும் போது கூட்டுத்ததபானம் கவனத்தில் எடுத்துக் கொள்ளும் அளவுகோல்கள் யாவை;

என்பதை அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

588/ '19

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் முன்மொழிவு இலக்கம் 211 இன் பிரகாரம் ரிப்பில் சுப்பர் பொசுபேற்று (T.S.P.) உற்பத்தியின் பொருட்டு தனியார் துறையை ஊக்குவிப்பதற்காக பின்பற்றப்பட்ட நடவடிக்கைமுறை யாதென்பதையும்;

(ii) இலங்கையின் பொசுபேற்றுப் படிமத்தின் சாத்திய வள கற்கை தொடர்பாக தயாரிக்கப்பட்டுள்ள ஒரு அறிக்கையை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) 1990 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை அரச துறையினால் பொசுபேற்று உற்பத்திக்காக வழங்கப்பட்ட பங்களிப்பு வருட அடிப்படையில் யாதென்பதையும்;

(iv) அரச துறையின் மூலம் பொசுபேற்று உற்பத்திக்காக வழங்கிய பங்களிப்பின் ஊடாக பசளை இறக்குமதி செய்வதற்காகச் செல்லும் செலவு (வருடாந்தம்) எந்த அளவில் குறைத்துக்கொள்ளப்பட்டுள்ளதென்பதையும்;

(v) இந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம் தற்போது அடையப்பெற்றுள்ள அனுகூலங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

678/ ‘18

கௌரவ கனக ஹேரத்,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் சிறிய இறப்பர் தோட்டக் கைத்தொழிலை சார்ந்து வாழ்கின்ற குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

(ii) இறப்பர் கைத்தொழில் வீழ்ச்சியடைந்ததன் காரணமாக தற்போது அவர்கள் மிகவும் அநாதரவான நிலைமைக்கு ஆளாகியுள்ளனர் என்பதை ஏற்றுக்கொள்வாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2015 ஆம் ஆண்டுக்கு முன்பு ஒரு நபரிடமிருந்து வருடத்துக்கு எந்தளவு இறப்பர் தொகைக்காக பொருளாதார சேவைக் கட்டணம் (ESC) அறவிடப்பட்டது;

(ii) மேற்படி வரிப்பணம் எவ்வளவு;

(iii) தற்போது மேற்படி ESC வரி ஒரு நபரிடமிருந்து எந்தளவு இறப்பர் தொகைக்காக அறவிடப்படுகின்றது;

(iv) மேற்படி வரி முறையினால் சிறிய இறப்பர் தோட்டக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள மக்களும் சிறிய இறப்பர் தோட்ட வர்த்தகர்களும் மேலும் அழுத்தத்திற்கு ஆளாகின்றனரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

689/ ’19

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில், வரையறுக்கப்பட்ட லங்கா வைத்தியசாலையின் பங்கு உரிமையாளர் ஒருவராக திரு. கோட்டாபய ராஜபக்ஷ செயற்பட்டுள்ளாரா என்பதையும்;

(ii) ஆமெனின், இக்காலப்பகுதியில் வரையறுக்கப்பட்ட லங்கா வைத்தியசாலையின் தலைவராக இவர் பெற்றுக்கொண்ட சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் எவ்வளவென்பதையும்;

(iii) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில், வரையறுக்கப்பட்ட லங்கா வைத்தியசாலை ஈட்டிய வருடாந்த இலாபம் ஒவ்வொரு ஆண்டு அடிப்படையில் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

476/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச்சபைக்கு சொந்தமான விலியமுல்ல தோட்டத்திலுள்ள காணியொன்று குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள நபரின் பெயர் யாது;

(ii) மேற்படி காணியின் பரப்பளவு யாது;

(iii) புதிய மதிப்பீட்டு அறிக்கைக்கிணங்க 2013 முதல் 2015 ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் குத்தகை அறவிடப்படாமை காரணமாக மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை இழந்த பணத்தொகை யாது;

(iv) இது சம்பந்தமாக அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

---

## 2019 மார்ச்சு 22, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

23/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இரத்தினபுரி மாவட்டத்தில், வெலிகெபொல பிரதேச செயலாளர் பிரிவில், அம்பேவில சந்தியிலிருந்து ரங்வல ஊடாக செல்கின்ற உடவெல வீதியானது பல வருட காலமாக திருத்தப்படாமையின் காரணமாக கடுமையாகச் சேதமடைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதி உரித்தாகும் நிறுவனம் யாது;

(ii) மேற்படி வீதியை போக்குவரத்துக்கு உகந்த வகையில் திருத்தியமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், திருத்தியமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி மற்றும் பூர்த்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாது;

(iv) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ள நிதித்தொகை யாது;

(v) தற்போது மேற்படி நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

133/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊவா மாகாணத்தில் பதுளை மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் தொழில்நுட்ப விஞ்ஞானகூட வசதி உள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அந்தப் பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) பதுளை மாவட்டத்தில் மாணவர்களின் தொழில்நுட்ப அறிவினை மேம்படுத்துவதற்கு அமைச்சு எடுக்கும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

335/ '18

கௌரவ இஸ்ஹாக் ரஹுமான்,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுரம் மாவட்டத்தின் பெருமளவிலான கிராமிய வீதிகள் பழுதடைந்துள்ளதன் காரணமாக பொதுமக்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், இவ்வீதிகளைத் துரிதமாக மறுசீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

456/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாதம்பேயில் அமைந்துள்ள வரலாற்று ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த தனிவெல்ல கோயிலுக்கு அருகில் கினிப்பிட்டிய வாவி என்ற பெயரில் ஒரு வாவி உள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாவியின் நீரைக்கொண்டு பயிரிடப்படும் வயல்களின் அளவு யாதென்பதையும்;

(iii) அதன் மூலம் நன்மை பெறுகின்ற விவசாயிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) தற்போது குறித்த வாவியில் பல்வேறு நீரியில் தாவரங்கள் வளர்ந்து வாவியானது சீர்குலைந்த நிலைமைக்கு உள்ளாகியுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனில், குறிப்பிட்ட வாவியை துரிதமாக மறுசீரமைப்பதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

536/ '19

கௌரவ பிமல் ரத்நாயக்க,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய லொத்தர் சபையினால் மஹஜன சம்பத 'ரஜ தினும' எனும் பெயரில் லொத்தர் சீட்டிழுப்பொன்று நடத்தப்படுகின்றதென்பதையும்;

(ii) மேற்படி லொத்தரின் 3328 வது சீட்டிழுப்பின் மூலமாக புத்தம்புதிய ஹைபிரிட் மோட்டார் வாகனமொன்று வழங்கப்படுவதாக தேசிய லொத்தர் சபையினால் பிரச்சார அறிவித்தலொன்று வெளியிடப்பட்டதென்பதையும்;

(iii) மேற்படி சீட்டிழுப்பில் உடுதும்பற, மடுகல்ல, கலமுனவில் வதியும் திரு. கே.டபிள்யு.ஜீ.பீ. கப்புகொட்டுவ மோட்டார் வாகனத்தை வென்றெடுத்தார் என்பதையும்;

(iv) மேற்படி மோட்டார் வாகனம் 2017.01.25 ஆம் திகதி இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன வளவில் வைத்து திரு. கப்புகொட்டுவவுக்கு கையளிக்கப் பட்டதென்பதையும்;

(v) வாகனத்தின் பதிவுச்சான்றிதழை பரிசீலிக்கையில் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது புதிய (Brand New) மோட்டார் வாகனமல்லவென்பதையும் பாவித்து பழுதுபார்க்கப்பட்ட (Reconditioned) மோட்டார் வாகனமென்பதையும்;

(vi) இது சம்பந்தமாக தேசிய லொத்தர் சபைக்கு முறைப்பாடு செய்தபோதிலும் எவ்விதமான பதிலும் வழங்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இது சம்பந்தமாக விசாரணையொன்றை மேற்கொண்டு இந்த மோசடியை புரிந்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வாரா;

(ii) திரு. கப்புகொட்டுவவுக்கு புதிய மோட்டார் வாகனமொன்றை வழங்க நடவடிக்கை எடுப்பாரா;

(iii) ஆமெனில் அத்திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

589/ '19

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட முன்மொழிவு இலக்கம் 293 இற்கு அமைய, பங்குச் சந்தையில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளருக்கு கருமபீடமொன்று தாபிக்கப்பட்டதா என்பதையும்;

(ii) கொழும்பு பங்குச் சந்தையில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கு மேலும் அனுகூலமான விதத்தில் நிதி வசதியளிக்கும் உன்னத நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு ஏற்புடையதாயமைகின்ற மேற்படி கருமபீடத்தைப் பற்றி கைத்தொழிலாலர்கள் போதியளவு விழிப்புணர்வைப் பெறவில்லை என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி கருமபீடம் அமைந்துள்ள இடம் மற்றும் கைத்தொழிலாலர்களுக்கு வழங்கப்படும் நிதிசார் நிவாரணங்கள் பற்றிய விபரங்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) இலங்கையில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளை ஆரம்பிக்கத் தேவையான "ஆரம்ப மூலதனத்தை" சலுகைமிக்க நிபந்தனைகளுடனும் மற்றும் சலுகை அடிப்படையிலான வட்டி வீதங்களின் கீழும், தொழில்முயற்சித் திறமைகளை பிணையாக வைத்துக்கொண்டு நிதி வளங்களை வழங்குகின்ற தேசிய வேலைத்திட்டமொன்றை தயாரிக்க தலையீடு செய்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

477/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இல.175 வொக்சோல் ஒழுங்கையில் அமைந்துள்ள மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான கட்டடம் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள நிறுவனம் யாதென்பதையும்;

(ii) அக்கட்டடம் குத்தகைக்காக விடப்பட்டிருந்த காலம் மற்றும் குத்தகைத் தொகை யாதென்பதையும்;

(iii) மேற்படி கட்டடத்திற்கு குத்தகை பணம் செலுத்தாமையினால் குத்தகைக்காரரொருவர் அக்கட்டடத்திலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளாரென அறிவாரா என்பதையும்;

(iv) வெளியேற்றப்பட்டுள்ள குத்தகைக்காரிடமிருந்து மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான சொத்து மீண்டும் சுவீகரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

759/ '19

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் சிறுநீரக நோயாளர்கள் உள்ள குடும்பங்களின் வீடுகளை திருத்துவதற்கு உதவித் தொகை வழங்கப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி அனுகூலத்தை பெற விண்ணப்பிப்பதற்கு தேவையான தகைமைகளும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்களும் யாவை என்பதையும்;

(iii) அதன் கீழ் வீடொன்றை திருத்துவதற்கு வழங்கப்படும் தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இதுவரையில் மேற்படி வீடமைப்பு உதவித் தொகையை பெறுவதற்கு விண்ணப்பித்துள்ள ஆட்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்துக்கமைய வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி விண்ணப்பதாரிகளுள் வீடமைப்பு உதவித் தொகை வழங்கப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்துக்கமைய எவ்வளவு என்பதையும்;

(iii) தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் அனைவருக்கும் அத் தொகை வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iv) திருத்துமளவுக்குக் கூட வீடு இல்லாத, குடிசைகளில் வசிக்கின்ற சிறுநீரக நோயாளர்களும் காணப்படுவதால், இவர்களுக்கு வீடொன்றை அமைத்துக் கொடுக்கும் வேலைத்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2019 மார்ச்சு 23, சனிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

25/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் கிராமியக் கைத்தொழில்களை விருத்தி செய்வதற்காக அரசாங்கம் பின்பற்றுகின்ற வழிமுறைகள் யாவை என்பதையும்;

(ii) இதுவரை இதற்காக செலவிடப்பட்டுள்ள பணத்தொகை யாது என்பதையும்;

(iii) கிராமியக் கைத்தொழில் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காக அமுல்படுத்தப்பட்டுள்ள கருத்திட்டங்கள் போதுமானதா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

840/ '19

கௌரவ கனக ஹேரத்.— கமத்தொழில், கிராமிய பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சீதாவக்கை ஆற்றை இடைமறித்து, தெரணியகெல பிரதேசத்தில் நீர்த்தேக்கமொன்றை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் தயார் செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கருத்திட்டத்தின் நோக்கம் யாது என்பதையும்;

(iii) இதன் மூலம் இப்பிரதேசத்திலான மண்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கெடுப்பை எவ்வாறு தடுக்க முடியும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இக்கருத்திட்டத்தை முன்னெடுக்கையில், தெரணியகெல நகரம், புராதன இடங்கள், கலாச்சார பெறுமதிவாய்ந்த இடங்கள், கமத்தொழில் மற்றும் ஏற்றுமதி பயிர்கள் அழிவடைவதானது மரபார்ந்த மக்கள் வாழ்க்கைமுறைக்கு தடங்கலாக அமையாதா என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தினால் பாதிக்கப்படும் மக்களை மீள்குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

134/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை பகிரங்க அரங்காட்டுகைச் சபையிலிருந்த அங்கத்தவர்களின் பெயர்கள் மற்றும் அவர்களின் சேவைக் கால எல்லைகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு காலப்பகுதியிலும் காட்சிப்படுத்தும் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட சிங்களத் திரைப்படங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு காலப்பகுதியிலும் தணிக்கைக்கு உள்ளான சிங்களத் திரைப்படங்கள் மற்றும் அவற்றின் இயக்குநர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iv) குறிப்பிட்ட திரைப்படங்களைத் தணிக்கை செய்யும் பொருட்டு பகிரங்க அரங்காட்டுகைச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(v) நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் தணிக்கைகளற்ற தரமான சிங்களத் திரைப்படக் கலையை உருவாக்குவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

241/ '18

கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தம்புள்ள பொருளாதார நிலையத்திற்குள் வாகனங்கள் பிரவேசிக்கும் போதும் அந்நிலையத்தின் மலசலகூடங்களை பயன்படுத்தும் போதும் கட்டணங்கள் அறவிடப்படுகையில் பலதரப்பட்ட முறைகேடுகளும் நிதி மோசடிகளும் இடம்பெறுவதாக விவசாயிகள் குற்றம்சாட்டுகின்றார்கள் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், தம்புள்ள பொருளாதார நிலையத்தில் நடைபெறும் இவ்வாறான முறைகேடுகளை கட்டுப்படுத்துவதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

379/ '18

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மீதொட்டமுல்லைக்கு மேலதிகமாக, உள்ளூராட்சி மன்றங்களினால் அகற்றப்பட்டு தற்போது உருவாகியுள்ள குப்பை மேடுகள் யாவை என்பதையும்;

(ii) அவை உரித்தான உள்ளூராட்சி மன்றங்கள் யாவை என்பதையும்;

(iii) தற்போது மேற்படி குப்பை மேடுகளில் காணப்படுகின்ற குப்பைகளின் அளவு யாது என்பதையும்;

(iv) இவற்றில் தற்போது ஆபத்தான நிலையில் காணப்படுகின்ற குப்பை மேடுகள் உள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவ்வாறான குப்பை மேடுகளுக்கு மென்மேலும் குப்பைகளை அகற்றி அவை வளர்ச்சியடைவதற்கு நடவடிக்கையெடுக்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) இன்றேல், அதற்காக உள்ளூராட்சி அமைச்சின் கீழ் ஏதேனுமொரு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் முதலீடுகளைப் பெற்றுக் கொள்ளும் வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அவை யாவை என்பதையும்;

(v) தற்போது ஏதேனும் வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டிருப்பின், அதன் முன்னேற்றம் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

590/ '19

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2016 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட முன்மொழிவு இலக்கம் 292 க்கு அமைய, டொலர் முறிகளுக்கு மேலதிகமாக முன்னோக்கியதொரு நடவடிக்கையாக, சீன யூஆன் மற்றும் சூகுன் முறிகளை வழங்க எடுத்த முயற்சி வெற்றியளித்ததா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை அரசாங்கத்தினால் இற்றைவரை வழங்கப்பட்டுள்ள டொலர் முறிகள்; வழங்கப்பட்ட திகதி, பெற்றுக்கொள்ளப்பட்ட டொலர்களின் அளவு, வட்டி வீதம், முதிர்ச்சியடையும் திகதி ஆகிய தரவுகளைக் கொண்ட தரவு அட்டவணையொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) அதிக வட்டிக்கு சர்வதேச சந்தையிலிருந்து கடன் பெறுவதாகக் குறிப்பிடப்பட்ட டொலர் முறிகள் வழங்கலின் மூலம், இலங்கை வரலாற்றில் ஆகக் கூடுதலான கடன் தொகை பெற்றுக்கொள்ளப்பட்ட ஆண்டு மற்றும் வட்டியின் அளவு யாதென்பதையும்;

(iii) சீன யூஆன் முறிகள் மற்றும் சூகுன் முறிகள் தொடர்பில் நிதி அமைச்சரின் அணுகுமுறை எத்தகையதாயுள்ளது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

691/ '19

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழிற் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2013 முதல் 2017 ஆம் ஆண்டு வரை பொலிஸ் திணைக்களத்தின் பயன்பாட்டுக்காக கண்ணீர் புகையினை கொள்வனவு செய்வதற்காக செலவு செய்யப்பட்ட பணத் தொகை ஒவ்வொரு வருடத்திற்கும் ஏற்ப தனித் தனியாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

760/ '19

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழிற் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) சனாதிபதி பதவியணியின் முன்னாள் தலைமை அதிகாரி கலாநிதி ஐ.எச்.கே. மஹானாம மற்றும் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் பீ. திசாநாயக்க ஆகியோர் அரச மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களில் சேவையாற்றத் தொடங்கியது முதல் இன்று வரை,

(i) வகித்துள்ள பதவிகளையும்;

(ii) அப்பதவிகளை வகித்துள்ள காலப்பகுதிகளையும்;

(iii) குறித்த பதவிகளில் பணியாற்றியுள்ள நிறுவனங்களையும்; மற்றும்

(iv) மேற்படி சேவைக்காலத்தில் இவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று அல்லது வேறு ஏதேனும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருப்பின், அவ்வாறான குற்றச்சாட்டுக்கள் மற்றும் அவற்றுக்கு எதிராக எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) திரு. (கலாநிதி) ஐ.எச்.கே. மஹானாம சனாதிபதி பதவியணி தலைமை அதிகாரி பதவியிலும், திரு. பீ. திசாநாயக்க அரச மரக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் பதவியிலும் நியமிக்கப்படுவதற்கு யாரால் விதப்புரை வழங்கப்பட்டிருந்தது என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

---

## 2019 மார்ச்சு 25, திங்கட்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

27/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் உலர்வலய அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் விதவைப் பெண்களுக்கு பொருளாதார ரீதியில் நிலையானதன்மையை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி பெண்களுக்கு தமது எதிர்கால நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான உதவியைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், இது தொடர்பில் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

135/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதுளை மாவட்டத்தில் அமைந்துள்ள க.பொ.த. (உயர் தர) தொழில்நுட்பப் பிரிவுக்கான வகுப்புக்கள் நடைபெறுகின்ற பாடசாலைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி பாடசாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) தற்போது பதுளை மாவட்டத்தில் உள்ள தொழில்நுட்பப் பாடத்தைக் கற்பிக்கின்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) இவர்களின் பெயர்கள் மற்றும் தற்போது சேவையாற்றுகின்ற பாடசாலைகள் யாவை என்பதையும்;

(v) எதிர்வரும் காலத்தில் பதுளை மாவட்டத்தில் மாணவர்களுக்கு மத்தியில் தொழில்நுட்பப் பாடத்தை பிரபல்யப்படுத்துவதற்காக அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

219/ '18

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிலைபோசெட்டை தடைசெய்ய அரசாங்கம் முடிவுசெய்த திகதி யாது;

(ii) அதில் தாக்கம் செலுத்திய விடயங்கள் யாவை;

(iii) மேற்படி தடைக்கென சிபாரிசுகளை முன்வைத்த நிபுணர் அமைப்புக்கள் அல்லது நபர்கள் யாவர்;

(iv) கிலைபோசெட் தடையை நீக்க அரசாங்கம் முடிவு செய்த திகதி யாது என்பதையும்;

(v) அதில் தாக்கம் செலுத்திய விடங்கள் யாவை;

(vi) தடையை நீக்குவதற்கென சிபாரிசுகளை முன்வைத்த நிபுணர் அமைப்புக்கள் அல்லது நபர்கள் யாவர்;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

245/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பதுளை மாவட்டத்தின் ரிதிமாலியத்த பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள அடையாளம் காணப்பட்ட தொல்பொருளியல் இடங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை;

(ii) அப்பிரிவில் அகழ்வுகள் மேற்கொள்ளப்படாத எனினும், அடையாளம் காணப்பட்ட தொல்பொருளியல் இடங்கள் அமைந்துள்ளனவா;

(iii) ஆமெனில், அவை யாவை;

(iv) மேற்படி பிரிவில் அமைந்துள்ள தொல்பொருளியல் முக்கியத்துவம் வாய்ந்த ரஜமகா விகாரைகளின் எண்ணிக்கை எவ்வளவு; அது பற்றிய அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பாரா;

(v) மேற்படி தொல்பொருளியல் இடங்களின் பேணல் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் பற்றிய முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

336/ '18

கௌரவ இஸ்ஹாக் ரஹுமான்,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இப்பலோகம பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட "அக்கர 500" எனும் கிராமம் தொடக்கம் கலாவெவ, குசலானகம வரையிலான சுமார் 3 கிலோ மீற்றர் நீளமான வீதி பெரிதும் பழுதடைந்து காணப்படுகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அதனைத் துரிதமாக நவீனமயப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

464/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் குடிநீர் பிரச்சினையை எதிர்நோக்கியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அக்குடும்பங்கள் வதியும் கிராம அலுவலர் பிரிவுகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) குடிநீர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக "புத்தளத்திற்கு உதயம்" வேலைத்திட்டத்தின் கீழ் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் இன்றளவில் புத்தளம் மாவட்டத்தில் குடிநீர் வசதி வழங்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை கிராம அலுவலர் பிரிவு வாரியாக யாது என்பதையும்;

(v) புத்தளம் மாவட்டத்தில் குடிநீர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக அமைச்சு எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

491/ '19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்தின் கால்நடை வளர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி மாவட்டத்தில் கால்நடை வளர்ப்பை மேம்படுத்துவதற்காக தற்போது மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) கால்நடை மேம்பாட்டில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள் கடமைகளை மேற்கொள்ளும் போது பல்வேறு தடைகளை எதிர்நோக்குகின்றார்கள் என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(iv) கண்டி மாவட்டத்தில் கால்நடை வளர்ப்பை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

537/ '19

கௌரவ பிமல் ரத்நாயக்க,— நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகத்தின் (SLIATE) டிப்ளோமா வழங்கும் விழா இற்றைவரையில் நடத்தப்பட்ட இடம் யாதென்பதையும்;

(ii) 2017 ஆம் ஆண்டில் மேற்படி டிப்ளோமா வழங்கும் விழா நடத்தப்பட்ட இடம் யாதென்பதையும்;

(iii) இதற்காக கடந்த ஆண்டில் ஒரு டிப்ளோமாதாரியிடமிருந்து அறவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) 2017 ஆம் ஆண்டில் இதற்கென ஒரு டிப்ளோமாதாரியிடமிருந்து அறவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(v) முந்திய ஆண்டுகளில் மண்டப வசதிகளுக்காக கட்டணம் செலுத்த வேண்டியேற்பட்டமையால், பணம் அறவிடப்பட்ட போதிலும், 2017 ஆம் ஆண்டில் இலவசமாக மண்டப வசதிகள் வழங்கப்படுகின்றபோதுகூட பணம் அறவிடுவதற்கான காரணம் யாதென்பதையும்;

(vi) இற்றைவரையில் டிப்ளோமா பட்டமளிப்பு விழா நடத்தப்பட்ட கொழும்பு நகரத்திற்கு பதிலாக கொழும்புக்கு வெளியே தங்குமிட வசதிகளையேனும் பெற்றுக்கொள்ள முடியாத அம்பாறை போன்ற பின்தங்கிய பிரதேசத்திற்கு இவ்விழா மாற்றப்பட்டமைக்கான காரணம் யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2019 மார்ச்சு 26, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

85/ '18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இறால் செய்கை மேற்கொள்ளப்படுகின்ற பிரதேசங்கள் யாவையென்பதையும்;

(ii) ஏற்றுமதிக்காக இறால் செய்கையினை மேற்கொள்கின்றவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இலங்கையின் வருடாந்த இறால் உற்பத்தி எவ்வளவென்பதையும்;

(iv) 2015 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை இலங்கையில் இறால் செய்கையின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட வருடாந்த வெளிநாட்டு செலாவணியின் அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(v) இறால் செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு அரசினால் வழங்கப்படும் நிவாரணங்கள் யாவையென்பதையும்;

(vi) எதிர்வரும் காலத்தில் இறால் செய்கையினால் கிடைக்கும் அந்நியச் செலாவணியை அதிகரித்துக்கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதையும்;

(vii) ஆமெனில், அதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை தெளிவுபடுத்துவாரா என்பதையும்;

(viii) செய்கையாளர்களை வலுவூட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை தெளிவுபடுத்துவாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல். ஏன்?

242/ '18

கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழிற் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உமா ஓயா அபிவிருத்திக் கருத்திட்டம் காரணமாக பெருந்தொகையானவர்களின் வீடுகளுக்கு சேதமேற்பட்டுள்ளதென்பதையும்;

(ii) அவ்வாறு வீடுகள் சேதமடைந்த குழுவைச் சேர்ந்தவர்களில் 220 பேருக்கு தமது வீடுகளை கைவிட்டுச் செல்லுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறு வீடுகளை கைவிட்டுச் செல்லுமாறு அறிவிக்கப்பட்டுள்ள வீட்டுச் உரிமையாளர்களின் பெயர்களும் முகவரிகளும் யாவை;

(ii) வீடுகளை கைவிட்டுச் செல்ல முன்னர் அவர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் இற்றைவரை ஈடேறவில்லை என்பதை அறிவாரா;

(iii) பாதிக்கப்பட்ட ஏறக்குறைய 220 வீட்டுச் உரிமையாளர்களின் சிக்கலைத் தீர்க்க அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

381/ '18

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழிற் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தற்போது 106 ஆண்டுகளைப் பூர்த்திசெய்துள்ள இலங்கை சாரணியர் இயக்கத்தில் 75000 இற்கு மேற்பட்ட சிறுவர்களும் சிறுமியர்களும் சேவை வழங்குகின்றார்கள் என்பதையும்;

(ii) சாரணியர்களின் "வேலை வாரம்" நிகழ்வின் மூலம் வருடாந்தம் ஈட்டிக்கொள்ளப்பட்டு சாரணியர் தலைமையகத்திற்கு கிடைக்கின்ற ரூபா 8 மில்லியன் பணத்தொகை கடந்த ஐந்து வருடங்களில் உரிய நடைமுறைகள் பின்பற்றப்படாமல் செலவு செய்யப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) தலைமை அலுவலகக் கட்டிடத்தை நிருமாணிக்கும் போது சாரணியர் குழு அங்கத்தவர்களின் அனுமதியின்றி முன்னாள் தலைமை சாரணியர் ஆணையாளர் திரு. நிமல் த சில்வா தனது நட்புக்குரியதொரு கம்பனிக்கு மதியுரைக் கட்டணமாக ரூபா 8 மில்லியன் பணத் தொகையையும் உரியமுறையில் நிருமாணிக்கப்படாத கட்டிடத்திற்கு ரூபா 14 மில்லியனையும் செலுத்தியுள்ளாரென்பதையும்;

(iv) சாரணியர் "வேலை வாரம்" நிகழ்வின் மூலம் ஈட்டிக்கொள்ளப்படுகின்ற பணத்தை பயன்படுத்தி வனப் பேணுகை திணைக்களத்தின் உரிய அனுமதியின்றி நுவரெலியா பிரதேசத்தில் சாரணியர் முகாமொன்றிற்காக நிருமாணிக்கப்பட்ட சீமெந்து கூடங்கள் தடைசெய்யப்பட்டதன் விளைவாக பெருந்தொகையான நிதிசார் நட்டம் எற்பட்டுள்ளதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது இந்நிதியினை தவறாகப் பயன்படுத்தியமை சம்பந்தமாக முறையானதொரு விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அதன் முன்னேற்றம் யாதென்பதையும்;

(iii) இல்லையெனில், எதிர்வரும் காலத்தில் இவ்விடயம் சம்பந்தமாக முழுமையான விசாரணையொன்று நடாத்தப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

565/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 'கொவிசெத' லொத்தர்ச் சீட்டு ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) அது ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி லொத்தர் சீட்டு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இன்று வரை அதனைச் சந்தைப்படுத்தி ஆண்டுதோறும் ஈட்டிய வருமானம் வெவ்வேறாக யாது எபதையும்;

(iv) இவ்வருமானத்தில் பரிசாக வழங்கப்பட்ட தொகை வருடாந்தம் எவ்வளவு என்பதையும்;

(v) விவசாய மக்களின் நலனோம்புகைக்கு செலவு செய்யப்பட்ட தொகை யாதென்பதையும்;

(vi) எதிர் காலத்தில் விவசாயிகளின் நலனுக்காக அதிகமான தொகையை செலவிட அமைச்சு எடுக்கவிருக்கும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

591/ '19

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட முன்மொழிவு இலக்கம் 290 இற்கமைய, பட்டியலிடப்பட்ட ஆதன வியாபார நம்பிக்கைப் பொறுப்பொன்று (Real Estate Trusts) தாபிக்கப்பட்டதா; இன்றேல், ஏன் என்பதையும்;

(ii) அத்தகைய நம்பிக்கைப் பொறுப்பொன்றை ஆரம்பிப்பதற்கான ஆரம்பப் பணிகள் பற்றிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட தரப்பினர் யாவரென்பதையும்;

(iii) பட்டியலிடப்பட்ட அலகு நம்பிக்கைப் பொறுப்பொன்று தாபிக்கப்படாமலே, அரசாங்க காணிகள் பாரிய அளவிலான வீடமைப்புக் கருத்திட்டங்களுக்காக தனியார் தொழில்முயற்சியாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்கான நிபந்தனைகள் மற்றும் கொடுப்பனவுகள் யாவையென்பதையும்;

(v) அரசாங்க காணிகள், பாரிய அளவிலான வீடமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காக தனியார் தொழில்முயற்சியாளர்களுக்கு ஒப்படைக்கப்படுகையில், அதற்கு உரியவாறு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், தனியார் தொழில்முயற்சியாளர்களை தெரிவுசெய்யும் போது பின்பற்றப்படுகின்ற முறையியல் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

679/ '18

கௌரவ கனக ஹேரத்,— மலைநாட்டுப் புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பழைய பெருந்தோட்ட வீடுகளுக்கு (லயன் அறைகள்) பதிலாக புதிய வீடுகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வீடுகள் வழங்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

(ii) இற்றைவரை வீடுகள் வழங்கப்படாத பெருந்தோட்டக் குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வீடுகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்கேற்ப கேகாலை மாவட்டத்தில் வீடுகள் வழங்கப்படவேண்டிய பெருந்தோட்டக் குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

(ii) இற்றைவரை வீடுகள் வழங்கப்பட்டுள்ள பெருந்தோட்டக் குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

(iii) வீடுகள் வழங்கப்படாத பெருந்தோட்டக் குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) ஒரு பெருந்தோட்ட வீட்டில் (லயன் அறையில்) தற்போது எத்தனை குடும்பங்கள் ஒன்றாக வாழ்கின்றார்கள் என்பதை அறிவாரா;

(ii) ஆமெனில், புதிய வீடுகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தை துரிதமாக்குவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அது எப்போது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

692/ '19

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015.01.09 ஆம் திகதி தொடக்கம் 2017.11.30 ஆம் திகதி வரை ஐக்கிய அமெரிக்க டொலருக்கு ஒப்பீட்டளவில் இலங்கை ரூபாயின் மதிப்பிறக்கப் பெறுமதி யாதென்பதையும்;

(ii) மேற்குறித்த காலப் பகுதியில் ரூபாவின் மதிப்பிறக்கம் காரணமாக அரசாங்கத்தின் வெளிநாட்டுப் படுகடன் அதிகரித்துள்ள அளவு எத்தனை ரூபா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

761/ '19

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழிற் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கலாநிதி ஐ.எச்.கே மஹாநாம, காணி அமைச்சின் செயலாளர் பதவியை வகிக்க முன்னர் பிரதம அமைச்சரின் மேலதிக செயலாளர் பதவியை வகித்துள்ளார் என்பதையும்;

(ii) இக்காலத்தில் பிரதம கணக்கீட்டு அலுவலராக அமைச்சின் கேள்விப் பத்திர சபைகளில் தீர்மானங்களை மேற்கொள்வதில் மாத்திரமின்றி அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கேள்விப்பத்திர சபைகளிலும் பணியாற்றியுள்ளார் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஔடத இறக்குமதி முதலிய அலுவல்கள் பற்றி அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கேள்விப்பத்திர சபைகளில் தவிசாளர்/உறுப்பினராக கலாநிதி மஹாநாம பணியாற்றியுள்ள காலவரையறை மற்றும் வகித்துள்ள பதவிகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி கேள்விப்பத்திர சபைகளுக்கு கேள்விகளை சமர்ப்பித்துள்ள நிறுவனங்கள் மற்றும் அவற்றின் தவிசாளர், முகாமைத்துவ பணிப்பாளர் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(iii) சமர்ப்பிக்கப்பட்டிருந்த கேள்விப் பத்திரங்களில் அங்கீகரிக்கப்பட்ட கேள்விப் பத்திரங்களுக்குரிய நிறுவனங்கள் மற்றும் விலைகள் யாவை என்பதையும்;

(iv) கலாநிதி மஹாநாமவின் தலைமையிலான அல்லது பங்கேற்புடைய கேள்விப்பத்திர சபைகளின் அங்கீகாரத்துடன் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ள ஔடத வகைகள், அளவுகள் மற்றும் நாடுகள் யாவை என்பதையும்;

(v) 2010 ஆண்டு தொடக்கம் இற்றைவரை சுகாதார அமைச்சின் அமைச்சரவை கேள்விப் பத்திர சபை கூடிய திகதிகள் மற்றும் அதன் அங்கத்தவர்கள் யாவர் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2019 மார்ச்சு 27, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

29/ '18

கௌரவ ஹேஷான் வித்தானகே,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் ஈட்டப்பட்டுள்ள இலாபம் அல்லது நட்டம் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(ii) அதில் தற்போது காணப்படுகின்ற மூலதனத் தொகை மற்றும் ஒதுக்குத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) அதிகாரசபையினால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள குறுகிய காலக் கடன், வங்கி மேலதிகப்பற்று, நடுத்தரகால மற்றும் நீண்டகாலக் கடன்கள் என்பவற்றின் மொத்தக் கூட்டுத்தொகை யாதென்பதையும்;

(iv) அதிகாரசபையினால் கடந்த அரசாங்கத்தினதும் தற்போதைய அரசாங்கத்தினதும் கீழ் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்களின் பயனுகரிகளின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(v) தேசிய வீடமைப்பு அதிகாரசபையினால் எதிர்காலத்தில் நடைமுறைபடுத்தப் படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

136/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது இலங்கை கல்வி நிருவாக சேவையில் ஈடுபட்டுள்ள மொத்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அந்த உத்தியோகத்தர்களின் பெயர்கள், பதவிப் பெயர்கள், சேவை புரியும் இடங்கள் ஆகியன வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) தற்போது இலங்கை கல்வி நிருவாகச் சேவையில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் வெற்றிடங்கள் நிலவும் சேவை நிலையங்கள் யாவையென்பதையும்;

(iv) அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு கல்வி அமைச்சு போட்டிப் பரீட்சைகளை நடத்தியுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அந்தப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(vi) இவர்களுக்கு நியமனம் வழங்க எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

220/ '18

கௌரவ (டாகடர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழிற் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எஸ்பெஸ்ரோஸ் பாவனையை தடைசெய்ய அரசாங்கம் முடிவுசெய்த திகதி யாது என்பதையும்;

(ii) அதில் தாக்கம் செலுத்திய விடயங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி தடைக்கென அரசாங்கம் அடிப்படையாகக்கொண்ட நிபுணர் குழு அல்லது நிபுணத்துவ அறிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) அரசாங்கம் மேற்படி தடையை நீக்க முடிவுசெய்த திகதி யாது என்பதையும்;

(v) அதில் தாக்கம் செலுத்திய காரணிகள் யாவை என்பதையும்;

(vi) எஸ்பெஸ்ரோஸ் பாவனைக்கு உகந்ததென மீண்டும் சிபாரிசு செய்த வல்லுநர்கள் அல்லது நிபுணர்கள் யாவர் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

246/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பதுளை மாவட்டத்தின் பதுளை பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள அடையாளம் காணப்பட்ட தொல்பொருளியல் இடங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை;

(ii) அப்பிரிவில் அகழ்வுகள் மேற்கொள்ளப்படாத எனினும், அடையாளம் காணப்பட்ட தொல்பொருளியல் இடங்கள் அமைந்துள்ளனவா;

(iii) ஆமெனில், அவை யாவை;

(iv) மேற்படி பிரிவில் அமைந்துள்ள தொல்பொருளியல் முக்கியத்துவம் வாய்ந்த ரஜமகா விகாரைகளின் எண்ணிக்கை எவ்வளவு; அது பற்றிய அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பாரா;

(v) மேற்படி தொல்பொருளியல் இடங்களின் பேணல் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் பற்றிய முழுமையான அறிக்கையொன்றை இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

337/ '18

கௌரவ இஷாக் ரஹுமான்,— கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம் மற்றும் கூட்டுறவுத்துறை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரம் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த ஆடைத் தொழிற்சாலைகளில் சுமார் நுற்றுக்கு ஐம்பது வீதம் தற்பொழுது மூடப்பட்டுள்ளதை அறிவாரா;

(ii) அரச அனுசரணையுடனாவது அந்த ஆடைத் தொழிற்சாலைகளை மீண்டும் வழமைநிலைக்கு கொண்டுவந்து பிரதேசத்தின் இளைஞர், யுவதிகளின் தொழிலின்மை பிரச்சினையை தீர்க்க உரிய நடவடிக்கை எடுப்பாரா;

(iii) ஆமெனில், அத்திகதி யாது;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

465/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வனாத்தவில்லுவ புபுதுகம மீனவக் கிராமத்திலிருந்து றெட்பானா மீனவக் கிராமம் வரை "இபெரணி அம்பலம்" கிராமிய வீதி என்ற பெயரில் வீதியொன்று உள்ளது என்பதையும்;

(ii) அந்த வீதி இன்றளவில் பாரியளவில் சேதமடைந்து காணப்படுகிறது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி மீனவக் கிராமத்தில் வாழும் மக்களின் வசதி கருதி குறித்த வீதியை அபிவிருத்தி செய்ய அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

492/ '19

கௌரவ ஆனந்த அளுத்கமகே,— நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்தில் போகஹகந்த சீவலிகந்த மற்றும் புலத்கொல்ல ஆகிய கிராமங்களுக்கு குழாய் நீர் இல்லாமையினால் அந்த கிராம மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அவ்வாறெனின் அக்கிராம மக்களுக்கு குழாய் நீரினை வழங்குவதற்காக அமைச்சு எடுக்கும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

538/ '19

கௌரவ பிமல் ரத்நாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி தர்மராஜ கல்லூரிக்கு பிள்ளைகளை அனுமதிக்கும்போது வசிப்பிடத்தை உறுதி செய்வதற்காக இறையிலி உறுதி, அன்பளிப்பு உறுதி மற்றும் குத்தகை உறுதிகளைச் சமர்ப்பிக்கின்ற ஆட்களுக்கு அதிக புள்ளிகள் கிடைக்கின்றன என்பதையும்;

(ii) மேற்படி உறுதிகள் இல்லாத நகர சபை வீடுகளில் வசிக்கின்ற குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு தமது வசிப்பிடத்தை உறுதி செய்வதற்கு இருப்பது நகர சபையினால் வழங்கப்படுகின்ற வரி செலுத்தியதற்கான ஆவணம் மாத்திரமே என்பதையும்;

(iii) மேற்படி ஆவணத்துக்கு மிகக் குறைவான புள்ளிகள் வழங்கப்படுவதன் காரணமாக இவர்களின் பிள்ளைகளை தர்மராஜ கல்லூரிக்கு அனுமதிக்க வாய்ப்புக் கிடைப்பதில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அரசுக்கு வரிப்பண வரியைச் செலுத்தி பல பரம்பரைகளாக இந்த வீடுகளில் வாழ்ந்து வருகின்ற குடும்பங்களின் பிள்ளைகளையும் தர்மராஜ கல்லூரிக்கு அனுமதிக்கக்கூடிய முறையியலொன்றை தயாரிப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2019 மார்ச்சு 28, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

243/ '18

கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உக்குவெல பிரதேசசபை ஆளுகைப் பிரதேசத்திற்குச் சொந்தமான அல்கடுவ எனும் நகரம் உள்ளதென்பதையும்;

(ii) அந்த நகரத்தில் பொது மலசலகூடங்களும் நீர்க் குழாய்வழி முறைமையொன்றும் கிடையாதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில் உக்குவெல நகரத்தை விருத்திசெய்வதற்காக அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

363/ '18

கௌரவ வேலு குமார்,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான போஹில் தோட்டத்தில் 2002 ஆம் ஆண்டில் தொழில் புரிந்த தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) 2000 முதல் 2015 ஆம் ஆண்டு வரை இத்தோட்டத்தில் தொழில் புரிந்து ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட ஆண் மற்றும் பெண் தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) அவ்வாறு ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட தொழிலாளர்களில் இன்றளவில் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி, ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஓய்வூதியப் பணிக்கொடை செலுத்தப்படாத தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அவ்வாறான தொழிலாளர் ஒவ்வொருவரினதும் பெயர், அங்கத்தவர் இலக்கம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி, ஊழியர் சேமலாப நிதி மற்றும் பணிக்கொடை ஊதியத்தின் நிலுவை தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

390/ ' 18

கௌரவ (டாக்டர்) துசிதா விஜேமான்ன,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழிற் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையின் வருடாந்த வெட்டுமரங்களின் பாவனை எவ்வளவென்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வெட்டுமரத் தேவைகள் எவ்வாறு பூர்த்தி செய்யப்படுகின்றன என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கைக்கு வெட்டுமரங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை இறக்குமதி செய்யப்பட்ட வெட்டுமரங்களின் அளவும் அவற்றின் பெறுமதியும் ஒவ்வொரு வருடத்துக்கமைய எவ்வளவென்பதையும்;

(iii) மேற் குறிப்பிட்ட மூன்றாண்டுகளில் தளபாடங்களாக இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட மரத்திலான பொருட்களின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி மூன்றாண்டுகளில் இறக்குமதி செய்யப்பட்ட வெட்டுமரங்களுக்கு செலவிடப்பட்ட முழுத் தொகை எவ்வளவென்பதையும்;

(v) கடந்த காலங்களில் வெட்டுமரங்களின் இறக்குமதி துரிதமாக அதிகரித்தமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(vi) இலங்கைக்கு வெட்டுமரங்களின் இறக்குமதிக்கு செலவாகும் பெரும் தொகை அந்நிய செலவாணியின் அளவை குறைப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

551/ '19

கௌரவ சி. சிறீதரன்,— தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010 ஆம் ஆண்டில், “சர்வதேச மட்ட விளையாட்டரங்கு” என்ற கருப்பொருளின்கீழ், கிளிநொச்சி மாவட்ட நகர மத்தியில் அமைந்த பொது விளையாட்டரங்கின் நிர்மாணப்பணிகளை ஆரம்பித்து 09 வருடங்கள் கடந்துள்ள போதிலும், இதுவரை அவ்விளையாட்டரங்கு கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு வீரர்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்படவில்லை என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இவ்விளையாட்டரங்கு சர்வதேச மட்டத்திலான விளையாட்டரங்கா அல்லது மாவட்ட மட்ட விளையாட்டரங்கா என்பதையும்;

(ii) இப் பொது விளையாட்டரங்கினை நிர்மாணிப்பதற்கு ஒதுக்கப்பட்டுள்ள பணம் எவ்வளவு என்பதையும்;

(iii) கடந்த 09 வருடகாலப் பகுதியினுள் இப்பணத்தில் செலவளிக்கப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) இவ்விளையாட்டரங்கின் நிர்மாணப் பணிகளுக்காக இதுவரை ஒப்பந்தம் மேற்கொண்டுள்ள ஒப்பந்தங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(v) இதுவரை ஒப்பந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஒப்பந்ததாரரின் செயற்பாடுகள் என்னவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) இவ்விளையாட்டரங்கின் நிர்மாணப்பணிகள் தாமதமடைவதால் மாவட்டத்திலுள்ள விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளும் எவ்வளவு தூரம் அசௌகரியத்திற்குள்ளாகியுள்ளனர் என்பதையும்;

(ii) கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத் துறையை அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் எவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

566/ ' 19

கௌரவ துஷார இந்துனில் அமைரசேன,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பண்டாரகம பிரதேச செயலகப் பிரிவினால் பண்டாரகம நகரத்தில் ஆயுர்வேத மருத்துவ நிலையமொன்று நடாத்தி வந்த இடத்தில் குத்தகைக்கு விடுவதற்கு கடை அறைகள் அமைக்கப்பட்டனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அமைக்கப்பட்ட கடை அறைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அதற்காக செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும் நிதி வழங்கியவர்கள் யாரென்பதையும்;

(iv) மேற்படி கடை அறைகள் குத்தகைக்கு விடுவதற்கு கேள்விப்பத்திரம் கோரப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஒவ்வொரு கடை அறைக்காகவும் கேள்விப்பத்திரம் முன்வைத்தவர்களின் பெயர், முகவரி கடை அறையின் இலக்கம் மற்றும் முன்வைக்கப்பட்ட விலை ஆகியவற்றை வெவ்வேறாக சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி கேள்விப் பத்திரம் கோரல் பற்றி மக்களை அறிவூட்ட,

(i) மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்;

(ii) அறிவித்தல் வெளியிடப்பட்ட ஒவ்வொரு பத்திரிகை, அறிவித்தல் இடப்பட்ட திகதி, மற்றும் அறிவித்தல்களின் எண்ணிக்கை;

(iii) விளம்பரப் பதாகை, அல்லது அறிவித்தல் பலகைகள் காட்சிப்படுத்தப் பட்டிருப்பின், அவ்விடங்கள் யாவையென்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி விளம்பரங்களின் பிரதிகளை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) மேற்படி கேள்விப்பத்திரக் கோரலுக்கு போதுமான அளவு கேள்விப்பத்திர தாரர்கள் இருக்கவில்லையென ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) இச் சிக்கலை தீர்த்துக்கொள்ள மேற்படி கடை அறைகளுக்காக மீண்டும் கேள்விப்பத்திரம் கோருவதற்கு சிபாரிசு செய்வாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

592/ '19

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் 289 ஆம் இலக்க பிரேரணையின் பிரகாரம் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் மேற்பார்வைச் சபையை வலுவூட்டுவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தைத் திருத்துதல் சம்பந்தமாக இற்றைவரை அடையப்பட்டுள்ள முன்னேற்றம் யாதென்பதையும் அது சம்பந்தமான பொறுப்பு வழங்கப்பட்டுள்ளவர்கள் யாவரென்பதையும்;

(iii) இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் மேற்பார்வைச் சபையை வலுவூட்டுவதற்கு 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்ட ரூபா 100 மில்லியனை பயன்படுத்திய முறையை தெளிவுபடுத்துவாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

693/ ’19

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழிற் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017.07.31 ஆம் திகதியளவில் அரசாங்கத்தின் பத்து இலட்சம் தொழில்வாய்ப்புக்கள் கருத்திட்டத்தின் கீழ் பெற்றுக்கொடுக்கப்பட்ட மொத்த தொழில்வாய்ப்புக்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி எண்ணிக்கை, ஒவ்வொரு மாவட்டத்திற்கமைய தனித்தனியே எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

762/ '19

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இதுவரை திருகோணமலை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் வீடமைப்பு நிதியுதவி, வீட்டுக்கடன் மற்றும் உபகரணங்களை பெற்றுக்கொடுத்தல் மற்றும் வீடமைப்பு முதலிய நிகழ்ச்சிகள் யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) “கிராம சக்தி” என்ற பெயரிலான ரூபா 5 இலட்ச வீடமைப்பு நிதியுதவி நிகழ்ச்சித்திட்டமானது திருகோணமலை மாவட்டத்தில் நடைமுறைப் படுத்தப்படும் பிரதேச செயலாளர் பிரிவுகள் யாவை என்பதையும்;

(ii) இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) இதற்காக பயனாளிகளை தெரிவு செய்யும் முறையியல் மற்றும் இதற்காக பூர்த்தி செய்ய வேண்டிய தேவைகள் யாவை என்பதையும்;

(iv) இந்நிகழ்ச்சியின் கீழ் ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவிற்கு அமைவாக தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(v) இதற்காக சில அரசியல் கட்சிகளின் அமைப்பாளர்களின் கடிதங்களுக்கு அமைவாக பயனாளிகள் தெரிவு செய்யப்படுவதாக முறைப்பாடு கிடைப்பதால் இது பற்றி மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2019 மார்ச்சு 29, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

31/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழிற் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1978 ஆம் ஆண்டுடன் ஆரம்பமான முதலாவது பாராளுமன்றத்திலிருந்து எட்டாவது பாராளுமன்றம் வரை ஒவ்வொரு பாராளுமன்றம் தொடர்பிலும் ஏற்படுத்தப்பட்ட அமைச்சரவைகளில் இருந்த அமைச்சரவை, இராஜாங்க மற்றும் பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாது என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு அமைச்சரவையிலும் இருந்த பெண் அமைச்சர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) ஒவ்வொரு அமைச்சரவையிலும் இருந்த பெண் அமைச்சர்களின் எண்ணிக்கையானது, குறித்த அமைச்சரவையில் இருந்த மொத்த அமைச்சர்களின் எண்ணிக்கையின் நூற்றுவீதமாக எவ்வளவு என்பதையும்;

(iv) நாட்டின் தற்போதைய பெண்கள் சனத்தொகையின் சதவீதத்திற்கு ஏற்றவாறு நியாயமான பிரதிநிதித்துவம் அமைச்சரவையில் பெண்களுக்குக் கிடைத்துள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

138/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதுளை மாவட்டத்தில், பெருந்தோட்டக் கம்பனிகளைச் சார்ந்ததாக சேவையாற்றுகின்ற ஊழியர்களிலும் அவர்களின் குடும்பங்களிலும் போசாக்கின்மை உயர் மட்டத்தில் காணப்படுகின்றமையை அறிவாரா என்பதையும்;

(ii) நல்லாட்சி அரசாங்கத்தினால் மக்களின் போசாக்கு மட்டத்தை அதிகரிக்கச் செய்வதற்காக வழங்கப்படுகின்ற "போசாக்குப் பொதி" வேலைத்திட்டத்திற்கு இணையாக, பெருந்தோட்டக் கம்பனிகளின் ஊடாகவும் மேற்படி மக்களுக்கு போசாக்குப் பொதியொன்றை பெற்றுக் கொடுத்தல் பொருத்தமாகுமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், பெருந்தோட்டக் கம்பனிகளின் ஊடாக அத்தகைய வேலைத்திட்டமொன்றை ஆரம்பிக்க அமைச்சு எடுக்கும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

207/ '18

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாணந்துரை வேகட ஜன உதானகம கிராமத்தில் வீடுகளைப்பெற்ற பயனாளிகள் 35 பேர் 1993 ஆம் ஆண்டு தொடக்கம் அந்த இடத்தில் வசிக்கின்றனர் என்பதையும்;

(ii) 2006 ஆம் ஆண்டு அப்போதைக்கு நகர சபை உறுப்பினராக இருந்த திரு பியசேன பர்னாந்துவினால் வீடுகளைப்பெற்ற பயனாளிகளுக்கு சட்டப்படியான உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட சேண்டுமென பாணந்துரை நகரசபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட யோசனை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது என்பதையும்;

(iii) 2014 ஆம் ஆண்டு பாணந்துறை நகர சபையினால் நில அளவைக் கட்டளையொன்றைப் பெற்று அந்தக் காணிகளை அளந்து உறுதி பத்திரங்களை வழங்க தயார் நிலையில் இருந்ததையும்;

(iv) 2018 ஆம் ஆண்டு மே மாதம் தற்போதய பாணந்துறை நகரச் சபை மீண்டும் அந்த யோசனையை ஏகமனதாக நிறைவேற்றியது என்பதையும்;

அவர் அறிவாரா ?

(ஆ) (i) வேகட ஜன உதானகம வீடுகளைப்பெற்ற பயனாளிகளுக்கு இதுவரை சட்டப்படியான உறுதிப்பத்திரங்கள் கிடைக்கவில்லை என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(ii) அந்த வீடுகளைப்பெற்ற பயனானிகளுக்கு உறுதிப்பத்திரங்கள் வழங்கும் திகதி யாது என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா ?

(இ) இன்றேல், ஏன்?

338/ '18

கௌரவ இஷாக் ரஹுமான்,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அலைதாங்கி இன்மையால் நாச்சதூவ குளத்தின் குளக்கரை நீர் அலைகளின் தாக்கத்தால் அரிப்புக்குளாகும் ஆபத்துள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், குளக்கரையின் பாதுகாப்புக்காக அலைதாங்கியை அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

493/ '19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்தில் காணப்படுகின்ற பேருந்து தரிப்பிடங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த திகதி தொடக்கம் மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சுக்கான ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தி அபிவிருத்தி செய்யப்பட்ட பேரூந்து தரிப்பிடங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iv) ஏனைய பேருந்துத தரிப்பிடங்களை அபிவிருத்தி செய்வதற்காக அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

516/ '19

கௌரவ இந்திக்க அனுருத்த ஹேரத்,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் எண்ணிக்கை யாது;

(ii) 2014.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு தேசிய வீடமைப்பு அதிகாரசபையில் பணிபுரியும் நிரந்தர, அமய, விசேட கருத்திட்ட மற்றும் பயிலுனர் பணியாட்டொகுதி எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iii) 2017.09.30 ஆம் திகதியன்று உள்ளவாறு தேசிய வீடமைப்பு அதிகார சபையில் பணிபுரியும் நிரந்தர, அமய, விசேட கருத்திட்ட மற்றும் பயிலுனர் பணியாட்டொகுதி எண்ணிக்கை வெவ்வேறாக யாது ;

(iv) 2017.09.30 ஆம் திகதியன்று உள்ளவாறு குறிப்பிட்ட ஒவ்வொரு பணியாட்டொகுதியிலும் பணிபுரிபவர்களின் பெயர், முகவரி, வதியும் கிராம அலுவலர் பிரிவு மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு ஆகியவை உள்ளடங்கிய ஆவணமொன்றை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

539/ '19

கௌரவ பிமல் ரத்நாயக்க,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மக்கள் வங்கியின் சேவை நீடிப்பு வழங்கும் கொள்கைக்கு அமைய வயது 60 வரை சேவை நீடிப்பு வழங்கப்படுகின்றது என்பதையும்;

(ii) முகாமைத்துவம், இந்த சேவை நீடிப்பு வழங்கும் கொள்கையை அமுல்படுத்தும் போது வங்கியின் ஊழல்களை வெளிப்படுத்திய தொழில் சங்கத் தலைவர்களை அடக்குவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது என்பதையும்;

(iii) அதற்கமைய, மக்கள் வங்கியை டிஜிட்டல்மயப்படுத்துவது தொடர்பில் வெளிப்படைத்தன்மைமிக்க விசாரணையைக் கோரிய இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின், மக்கள் வங்கிக் கிளையின், முன்னாள் தவிசாளர் திரு எஸ்.கே.டி. ஹேவாபத்திரனவுக்கு வழங்கப்பட்டிருந்த தொழில் சங்க நடவடிக்கைகளுக்கான விடுவிப்பதானது முதலில் ரத்துச் செய்யப்பட்டது என்பதையும்;

(iv) இதனை அடுத்து அவர் கோரிய சேவை நீடிப்பை வழங்காது அவரை ஓய்வு பெறச்செய்ய முகாமைத்துவம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்பதையும்;

(v) அவர் கோரிய விசாரணை நடாத்தப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) திரு ஹேவாபத்திரன கோரிய சேவை நீடிப்பு வழங்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாது என்பதையும்;

(iii) திரு. ஹேவாபத்திரன கோரிய விசாரணை நடாத்தப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

680/ '18

கௌரவ கனக ஹேரத்,— ஆரம்ப கைத்தொழில்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் வாழும் மூத்த பிரசைகளுக்கு (60 வயதைக் கடந்தவர்கள்) அரசாங்கத்தினால் வழங்கப்படும் நலனோம்புகை வசதிகள் யாவை;

(ii) 2001 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் மூத்த பிரசைகளின் சனத்தொகை வீதம் ஒவ்வொரு வருடத்திற்கு ஏற்றவாறு எவ்வளவு;

(iii) எதிர்வுகூறல்களுக்கேற்ப 2021 ஆம் ஆண்டில் இவ்வீதம் எவ்வளவாக காணப்படும்;

(iv) இலங்கையில் மூத்த பிரசைகளின் வீதம் வருடாந்தம் துரிதமாக அதிகரிக்கின்றதென்பதை அவர் அறிவாரா;

(v) ஆமெனில், அதிகரிக்கும் இந்த மூத்த பிரசைகளின் பாதுகாப்பிற்கும் நலனோம்புகைக்கும் ஏதேனும் நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மூத்த பிரசைகளுக்கு வழங்கப்படும் சிரேஷ்ட பிரசைகள் அடையாள அட்டையின் மூலம் அரசாங்கம் எதிர்பார்க்கும் சலுகைகள் நிறைவேற்றப்படுகின்றதா என்பதையும்;

(ii) மூத்த பிரசைகளின் நிலையான வைப்பிலிருந்து அறவிடப்படும் வரியிலிருந்து இவர்களுக்கு விலக்களிப்பதற்கு உங்கள் அமைச்சு தலையிடுமா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இலங்கையில் உள்ள வயோதிபர் இல்லங்களின் எண்ணிக்கை யாது;

(ii) இந்த வயோதிபர் இல்லங்களின் தரத்தை நிர்ணயிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் அளவுகோல்கள் யாவையென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?